# சின்னக்கல்வராயன்மலை மலையாளிப் பழங்குடி மக்களின் வாய்மொழி இலக்கியப் பண்பாடு

72

திருமதி அ. ரேவதி
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம் – 636008.

**ஆய்வுச் சுருக்கம்**

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி நினைப்பிற்கு எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதை பழமொழியில் உள்ள- "மொழி" என்னும் சொல் உருதிப்படுத்துகிறது.தமிழக மலையாளிகள் மூன்ற பெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.15,16 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியில் இருந்து வெளியேறிகுறிப்பாக ) மலைக்குச் சென்று அங்கு காடுகளில் (காஞ்சிப்புரம் மற்றம் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வாழ்ந்த பழங்குடினருடன் கலந்து பழங்குடிப் பெண்களை திருமணம் செய்துக் கொண்டு அங்கியே நிரந்திரமாக தங்கிவிட்ட பழங்குடிகள்தமிழகத்தின் சமவெளி பகுதிகளில் அங்கங்கே சிதறி வாழும் . .பழங்குடிகள்

தொண்று தொட்டு பன்னெடுங்காலமாக வாழ்ந்து வரும் பழங்குடிகளின் பழைய மரபுகளும் பண்பாடுகளும் இன்றளவும் மாறாமல் இருப்பதை காட்டுவதே நாட்டுப்புற பழமொழிகளே என்று கூறினால் அது மிகை ஆகாது, அதே போல சின்னக்கல்வராயம் மலை மலையாளி மக்கள் பயன்படுத்தும் பழமொழிகளின் வாயிலாக அவர்களின் பண்பாடு வினோத நம்பிக்கைகளும் பழைய சொல்லாட்சி முறைகளும் வெளிப்படுகின்றதுஆகவே இம்மக்களின் மூலம் நம்பிக்கை பழக்க . வழக்கங்கள், வேளாண்மை தொழில், திருமண உறவு முறைகள் போன்ற பண்பாட்டு கூறுகளையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் அறிய முடிகிறது.

**பழமையான சொற்கள்**

மூதறிவு,காராளன்,மோத்து,காவாய்,யனாம்மாக,ஜாகிர்தார்கள்,தன்னவன்

**முன்னுரை,**

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி நினைப்பிற்கு எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதை பழ – மொழியில் உள்ள "மொழி" என்னும் சொல் உறுதிப்படுத்துகிறது. சமூதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவு கூறுகளையும் பண்பாட்டு உள்ளோட்டங்களையும் நாட்டார் வழக்கற்று இலக்கியங்கள் கொண்டு திகழ்கின்றன. இலக்கிய பரப்பில் சின்னக்கல்வராயன் மலையாளி பழங்குடி மக்களின் பழமொழிகள் குறித்து இக்கட்டுரையில் விளக்கப்பெறும்.

தமிழில் பழமொழிக்கு மூதூரை, முதுமை, மொழிமை, முன்சொல், பழங்சொல் என ஆறுப் பொருள் இருப்பதாக சேந்தன், திவாகரம் கூறுகின்றது. பழமையான நம்பிக்கைகளையும் , வரலாற்றினையும், பண்பாட்டினையும், மனித உணர்வுகளையும் காட்டுப்பவை பழமொழிகள். சமூதாயத்தின் அனுபவ மூதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றாக திகழ்கின்றது. பழமொழி என்ற சொல்லே பழமொழி பற்றிய சிறந்த வரையறையாக அமைந்துள்ளது என்கிறார் "ஜான் லாசரன்" அவர்கள் பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின்

மூலம் சுருக்கிக் கூறுவதாகும்.

ரிச்சார்டு டார்சன் என்பவர் பழமொழியானது எளிதில் கவணிக்கக் கூடிய, சேகரிக்கக் கூடிய தொன்மை வாய்ந்த கருத்தாகும். பழமொழி பழமையும், எளிமையும், இனிமையும் வாய்ந்த்து. பழமொழிகள் அறவுரையும், அறிவுரையும் கொண்டிலங்கவதோடு வாழ்க்கைக்கு கை விளக்காகவும் பயன்படுகிறது.

தொல்காப்பியர் பழமொழியை “முதுசொல் முதுமொழி” என்று குறிப்பிடுகிறார்.

“அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்”

தொல் 391

“ஏது நுதலிய முதுமொழி என்பர்”

தொல் 165

தொல்காப்பியர் பழமொழியை முதுமொழி, முதுசொல் என்ற பெயரால் அழைக்கிறார். இளங்கோவடிகள் “நெடுமொழி” என்று அழைக்கிறார். திருவெம்பாவை “பழஞ்சொல்” என்றும் குமரேச சதகம் “ உலக மொழி” என்றும் கொன்றை வேந்தன் “மூத்தோர் சொல் என்றும் அழைக்கின்றன. கம்பரும் பழமொழியை “மூதுரை” என்ற சொல்லால் குறிப்பிடுகின்றர். நச்சினார்க்கினியர் பழமொழியை பழம் வார்த்தை என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். பார் போற்றும் பாரதியும் பழமொழியைத் தனது பாடல்களில் எழுதியுள்ளார். பழமொழி தொல்காப்பியர் காலம்தொட்டு இலக்கிய வழக்கில் பயின்று வருவதை அறிகிறோம்.

ஜெர்மன் நாட்டு பேரறிஞர் செல்வந்தே அவர்கள், டிரென்ச் அவர்கள் “பழமொழிகளும் அவற்றின் படிப்பினைகளையும் என்ற நூலில் பழமொழி ஒரு மூச்சில் சொல்லக்குடியதாகவும், சுருக்கமாகவும் செறிவாகவும், கூற்மையாகவும் அன்றாட வாழ்க்கையில் பயன்பட்டுத்தக் கூடிதாகவும் இருக்க வேண்டும் என்றார். பழமொழிகளை அனைத்துச் சமூதாயங்களும் ஆக்கம் செய்துள்ளன. முன்னேறிய சமூதாயமும், முன்னேற்றமில்லாப் பழங்குடி சமூதாயமும் பழமொழியை பயன்படுத்துகின்றன.சமுதாயத்தில் அற கருத்துக்களை வலியுறுத்தவும் தவறு செய்யும் போது இடித்துரைக்கவும் சமூதாயத்தில் இதனைச் செய்யவும், இதனைச் செய்யக் கூடாது என கட்டளையிடவும் பழமொழியை பயன்படுத்துகின்றனர். அந்த வகையில் சின்னகல்வராயன்மலை மலையாளி பழங்குடி மக்களின் மத்தியில் பயன்படுத்துகின்ற பழமொழியைப் பற்றி அறிவோம்.

தமிழக மலையாளிகள் மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். 15,16 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் வடக்கு பகுதியில் இருந்து வெளியேறி (குறிப்பாக காஞ்சிப்புரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து) மலைப்பகுதிக்கு சென்று அங்கு காடுகளில் வாழ்ந்த பழங்குடியினருடன் கலந்து பழங்குடிப் பெண்களை திருமணம் செய்துக் கொண்டு அங்கியே நிரந்திரமாக தங்கிவிட்ட பழங்குடிகள்.

தமிழகத்தின் சமவெளி பகுதிகளில் அங்கங்கே சிதறி வாழும் பழங்குடிகள்.

தொண்றுதொட்டு பன்நெடும் காலமாக வாழ்ந்து வரும் பழங்குடிகள்.

தமிழகத்தின் மொத்தம் 36 வகையான பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றன. இவர்களில் பெரும்பாலோர் “மலையாளிகள்” என்ற இனத்தை சார்ந்தவர்கள். இம்மலையாளிகள் ஏனைய பழங்குடிகளான தொதுவர், கோத்தர், பனியர், குறும்பர், கோல பண்டையப் பழங்குடிகள் என்று இந்தியா அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சேர்வராயன்மலை, சின்னக்கல்வராயன்மலை,

பெரியகல்வராயன்மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கொல்லிமலை, பச்சமலை, பாலமலை போன்ற மலைகளில் மலையாளி மக்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தங்களை மலையாளி என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் அனைவரும் தமிழ் மட்டுமே பேசுகின்றனர். எனவே தான் இவர்களை தமிழ் மலையாளி என்று கூற வேண்டும்.

**சின்னக்கல்வராயன்மலை மக்களின் நம்பிக்கை**

சின்னக்கல்வராயன் மலையாளிப் பெண்கள் எப்போதும் சுமங்கலியாகவே இருக்க வேண்டும் என்பது இவர்களின் நம்பிக்கை. எனவே விதவைகள் மாறுமனம் கட்டாயம் செய்துக் கொள்ள வேண்டும். பெண்கள் இறக்கும் போது சுமங்கலியாகவே இறக்க வேண்டும் என்பதே இவர்களுடைய எண்ணமாகும். அப்படி மாறுமனம் செய்துக் கொள்ளாமல் விதவையாக இருந்தால் வாழாவெட்டி என்று அழைக்கின்றனர்.

**பழமொழிகள்**

பழைய மரபுகளும், பண்பாடுகளும் இன்னும் மாறமால் இருப்பதை காட்டுவது நாட்டுப்புற பழமொழிகளே என்று கூறினால் அது மிகையாகாது அதுபோல சின்னக்கல்வராயன்மலை மலையாளி மக்கள் பயன்படுத்தும் பழமொழிகளின் வாயிலாக அவர்களின் பண்பாடு வினோத நம்பிக்கைகளும், பழைய சொல்லாட்சி முறைகளும் வெளிப்படுகின்றது. ஆகவே இம்மக்களின் பழமொழிகளின் வாயிலாக அவர்களின் நம்பிக்கைகளை காட்டுவதே இதன் நோக்காகும். இதனால் தங்களை மலையாளத்தான் என்றும், காரளக் கவுண்டர் என்று சொல்லிக் கொள்வது உண்டு.

திருமணம் தொடர்பான பழமொழிகள்

"வேடெனெ வுட்டு காரளெனெ கெய் புடிசெ சமாச்சாறொம்"

இவர்கள் திருமணத்தின் போது ஆற்றங்கரைக்குச் சென்று மணப்பெண் அரசி, காசு இவைகளை ஆற்றில் போட்டு விட்டு பின்னர் தண்ணீர் கொண்டு வருவாள். இதற்கு பிறகு தான் மணமகன் தாலி காட்டுவான். அப்போழுது மணப்பெண் இப்பழமொழி கூறுவதாக அமைந்துள்ளது. அதாவது ஒரு காலத்தில் இவர்கள் வேட குல பெண்களாக இருந்தார்கள். பின்னர் வேடர்களை விட்டு, காரளர்களை திருமணம் செய்துக் கொண்டனர் என்பதை காட்டுவதாக உள்ளது.

விருந்து உபசரிப்பு தொடர்பான பழமொழி

"முதல் புருஷன கவனிச்சுட்டுதான் கள்ளப் புருஷன கவனிக்கனும்"

மலையாளி மக்களின் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றால் வந்த விருந்தினரை முதலில் கவனித்து விட்டு பிறகுதான் அவர்களுடைய கணவர்களை கவனிப்பார்கள். வந்தவர்களுக்கே முதல் மரியாதை இந்த பழமொழியை பார்க்கும் போது ஒரு காலத்தில் இவர்கள் வேடர் குல பெண்களாக இருந்தார்கள். பின்னர் வேடர்களை விட்டு காராளர்களை திருமணம் செய்துக் கொண்டனர் என்பதை காட்டுவதாக உள்ளது.

"காராளன ஏமாத்தி வாங்குனா கருவறுத்துடும்"

வெகுளியாக இம்மக்கள் பல நூற்றாண்டுகளாக வெளியாரிடம் ஏமாந்து வாழ்ந்து வருகின்றனர் என்பது உண்மை மாற்றவர்கள் இவர்களை ஏமாற்றக் கூடாது என்பதற்காகவே இந்த பழமொழியினைச் சொல்கிறார்கள் முன்பு ஒரு காலத்தில் ஜாகிர்களிடமும், வியாபாரிகளிடமும் பெருமளவில் கடுக்காய், கிளக்காய் இன்னும் பல சிறுதானியங்களை கொடுத்துவிட்டு தங்களுக்குத் தேவையான உப்பு, மிளகாய், துணிமணிகள், எண்ணெய், சோப்பு போன்ற பொருட்களை பெற்று வந்தனர். இவ்வித பண்டமாற்று முறையில் பாதிக்கப்பட்டவர்கள் இவர்களே.

"ஆத்திப் பூ பூத்தால ஆலங்காய் காய்த்தால"

ஒருவர் பல மாதங்களாக அல்லது பல வருடங்களாக தன்னுடைய சொந்த பந்தங்களை பார்க்க வராமல் திடீர் என்று சொந்தகாரர்கள் வீட்டிற்கு வருகைப்புரிந்தால் வந்ததின் நோக்கம் என்ன? என்று நேராக கேட்காமல் மறைமுகமாக விசாரிப்பதற்கு இவ்வாறு கூறுக்கின்றனர்.

பயிர்த்தொழில் தொடர்பான பழமொழி

“காராளன் கல்லுமேலே போட்டாலும் வெளையும்”

“காராளனுக்கு கல்லுமேலே போட்டா கதுரு வெளெயும்”

“முள்ளுமேலெ போட்டா மோத்து வெளெயும்”

சாமை, வரகு, தினை, சோளம், கேழ்வரகு முதலியன இவர்களின் பயிகளாகும். கரடு முரடான மலை சரிவுகளில் விவசாயம் செய்கின்றனர். எனவே கல்லில் விதை போட்டாலும் கதிர் விளையும் என்றும், முள்ளுமேல் போட்டாலும் மோத்து விளையும் என்று நம்பி பயிர் செய்கின்றனர்.

“பில்லு வெதைய நம்பலாம், நெல்லு வெதைய நம்ப முடியாது”

புல்லின் விதை இயபாகவே முளைத்து விடும் ஆனால் நெல்லின் விதை அப்படி அல்ல. விதைப்புக்கு என்றே தேர்ந்து எடுத்து விதைக்க வேண்டும். அப்படி தேர்ந்து எடுத்து விதைத்தால் தான் செழிப்பாக விளைச்சல் தரும் என்பது நம்பிக்கை.

“வெளையாத காட்டில் வெதைய போட்டுக்கிட்டு வெளையல வெளையல என்றதா”

விளையாதக் காட்டில் விதையைப் போட்டு விளையவில்லை என்று வருத்தப்படுவதை விட்டுவிட்டு விளைகின்ற காட்டில் விதையை விதைத்து அதிக மகசூல் பெறலாம். விளையாத காடு என்பது ஒரு வகையான விஷச் செடி முளைத்திருக்கும். அந்த செடி இருக்கும் காட்டில் எந்த விதையை போட்டாலும் முளைக்காது.

உழைப்பு

“காவாளிக்கு யார் பெண் கொடுப்பா”

மலையாளி பெண்கள் உழைப்பவர்களைத் தான் மதிப்பார்கள். உழைக்கின்ற ஆண் மகனைத் தான் பெண்கள் திருமணம் செய்வார்கள். காவாயி என்பதற்கு உழைக்கத் தெரியாதவன் என்று பொருள்.

“மலை ஏறுனாலும் மச்சான் துணை வேனும்”

மலையாளி மக்கள் மலைக்குச் சென்று தேன் அறுப்பார்கள். அப்படி தேன் அறுக்கச் செல்லும் பொழுது மச்சானைத் தான் அழைத்துச் செல்வார்கள். அண்ணன், தம்பிகளை அழைத்துச் செல்வதில்லை. பெண் கொடுத்த மச்சானை அழைத்துச் சென்றால் தனக்கு பாதுகாப்பாக இருப்பான். சகோதர்களை அழைத்துச் சென்றால் உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்பதால் அழைத்துச் செல்வதில்லை.

“அத்துல போட்டாலும் அளந்து போடு”

ஒருவருக்கு பொன், பொருள் கடன் மற்றும் தானம் (யனாம்மாக) கொடுப்பதாக இருந்தாலும் அளந்துக் கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால் தான் குடும்பத்தை சரியாக நடத்திச் செல்ல முடியும். இல்லையென்றால் வாழ்க்கை சரியாக இருக்காது.

“தன்னவன் இல்லாத பொலப்பு தடிக்கொண்டு அடிக்காது”

ஒருவன் ஒரு வேலை செய்யும் பொழுது உரிமையுடையவர் அருகில் இருந்து செய்தால் நான்றாக இருக்கும். விரைவில் செய்து முடிக்கலாம். உரிமையுடையவர் அருகில் இல்லாத போது அந்த வேலை நன்றாக நடப்பது இல்லை. இதனை உணர்த்த தான் இந்த பழமொழியை பயன்படுத்தப்படுகிறது.

“காராளன் சொத்து பாதாளம் போனாலும் விடாது”

ஒரு காலத்தில் மலையாளி மக்கள் மலைகளில் கிடைக்கும் கடுக்காய், தான்றிகாய், ஏலகாய், தேன்,

சிறுதானியப் பொருட்கள், வள்ளிக்கிழங்கு போன்ற எண்ணற்ற பொருட்களை எடுத்துக் கொண்டு மலையின் கீழே உள்ள மக்களிடம் கொடுத்து பண்டமாற்று முறையில் ஈடுப்பட்டார்கள். அப்பொழுது பட்டணத்தில் உள்ள மக்கள், மலையாளி மக்களை ஏமாற்றினார்கள். எனவே ஏமாறாமல் இருக்க இப்பழமொழியை பயன்படுத்தினார்கள். மலையாளி மக்களின் உழைப்பை ஏமாற்றி சாப்பிடுகின்றவன் பாதாளத்தில் சென்று மறைந்தாலும் அவனை சும்மாவிடாது. அதற்கான வினைப்பயனை அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

**முடிவுரை**

சின்னக்கல்வராயன்மலை மலையாளி மக்களின் பழமொழிகள் மூலம் தொழில்கள், பழக்கவழங்கள், உறவுமுறை, திருமணம், நம்பிக்கை, வேளாண்மை போன்ற பண்பாட்டு கூறுகளையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் அறிய முடிகிறது.

**துணை நூல் பட்டியல்**

1. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 8

2. பக்தவத்சல பாரதி 2007, தமிழ்கப் பழங்குடிகள் புத்தகநத்தம் அடையாளம்.

3. தமிழண்ணல் 2011, தொல்காப்பியம், மதுரை செல்லப்பா பதிப்பகம்.

தகவலாளர்கள்,

அண்ணாமலை 70, வெங்காயகுறிச்சி,

மொலையன் 63, வெங்காயகுறிச்சி,

மூப்பன் 65, வெங்காயகுறிசி,

லட்சுமணன் 75, வெங்காயகுறிசி,

பூச்சி 75, நத்தம்பட்டு,

குழந்தையன் 60, நத்தம்பட்டு,

ராமன் 55, மூங்கிபட்டு,

தீர்த்தன் 70, மூங்கில்பட்டு,

லட்சுமணன் 75, மூங்கில்பட்டு,